# செய்திக்குறிப்பு

## முன்னோடித்திட்டம் ..................

தொழிலாளர் அரசு காப்பீட்டுத் திட்டத்தின் (இ.எஸ்.ஐ) கீழ் தகுதி பெற்ற தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்க்கு நாடு தழுவிய அளவில் "ஸ்மார்ட் கார்டு" எனப்படும் உலகத்தரம் வாய்ந்த நவீன அடையாள அட்டை வழங்க காப்பீட்டுக்கழகம் திட்டமிட்டுள்ளது. இதற்கான முன்னோடித்திட்டம் ஏற்கனவே டெல்லி, உத்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு, பெங்களூருவில் பரிட்சார்த்த "ஸ்மார்ட் கார்டு" சமீபத்தில் வெளயிடப்பட்டது. இவ்வெற்றியினைத் தொடர்ந்து "ஸ்மார்ட் கார்டு" வழங்கும் திட்டம் தற்போது தமிழ்நாடு உள்ளிட்ட இதர முக்கிய மாநிலங்களிலும் அமலாக்கம் செய்யப்படவுள்ளது.

## விப்ரோ நிறுவனம் ....................

இத்திட்டத்தினை நிறுவி, செயலாக்கி, குறிப்பிட்ட காலம் வரை தானே நிர்வகிக்கும் பொறுப்பினை ஒப்பந்த அடிப்படையில் முன்னணி இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவனமான "விப்ரோ" எடுத்துக் கொண்டுள்ளது. இதன் முக்கிய அங்கமாக, நாடு முழுவதும் உள்ள இ.எஸ்.ஐ மண்டல மற்றும் கிளை அலுவலகங்கள் மற்றும், மருத்துவமனைகள், மருந்தகங்களை தகவல் தொழில் நுட்ப ரீதியாக ஒருங்கிணைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## ஸ்மார்ட் கார்டு என்றால் என்ன? ....................

"ஸ்மார்ட் கார்டு" என்னும் நவீன பிளாஸ்டிக் அடையாள அட்டை ஒவ்வொரு காப்பீட்டாளருக்கு மட்டுமின்றி அவரது குடும்பத்திற்கும் (தனித்தனி அடையாள அட்டை) வழங்கப்படவுள்ளது. காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினரின் புகைப்படம் மற்றும் கைவிரல் ரேகையுடன் அடிப்படை அடையாள விபரங்கள் "ஸ்மார்ட் கார்டில்" நவீன தொழில் நுட்ப உதவியுடன் பதியப்படும். பாதுகாப்பு உத்திகளுடன் கூடிய "ஸ்மார்ட் கார்டி"னை எந்த ஒரு தவறான நபரும் உபயோகிக்க இயலாது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்மார்ட் கார்டு வாயிலாக மருத்துவ வசதி.........................

"ஸ்மார்ட் கார்டு" உதவி கொண்டு காப்பீட்டாளரோ அவரது குடும்பத்தினரோ, நாட்டின் எந்த ஒரு இ.எஸ்.ஐ மருத்துவமனை அல்லது அலுவலகத்தினின்றும் தத்தம் தகுதி தரத்திற்கேற்ப மருத்துவ வசதி உள்ளிட்ட பல்வேறு காப்பீட்டுப் பயன்களைத் துய்க்கவும், காப்பீட்டு கடமைகள் மற்றும் உரிமைகள் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளவும் இயலும்.

## தேசிய பரிமாணங்கள்.......................

இ.எஸ்.ஐ திட்டத்தின் கீழ் தேசிய அளவில் ஒரு கோடிக்கும் மேலான தொழிலாளர்கள் இன்றைய நிலையில் பதிவு பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கையானது மேன்மேலும் அதிகரித்த வண்ணம் இருப்பது குறிப்பிடத்தக்கது. காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்திற்கும் தனித்தனி "ஸ்மார்ட் கார்டு" வழங்கப்படவுள்ள நிலையில் நாடு முழுக்க ஏறத்தாழ இரண்டு கோடி அடையாள அட்டைகள் வெளியிட வாய்ப்புகள் எழுந்துள்ளன.

## கோவை மண்டலத்தில் ..........................

கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய தொழிலாளர் காப்பீட்டுக் கழகத்தின் கோவை மண்டலத்திலும் "ஸ்மார்ட் கார்டு" திட்ட நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தொழிலாளர் இடம்பெயர்தல் போன்ற காரணங்களினால், குறிப்பாக கோவை மற்றும் சுற்று வட்டாரங்களில் பெருகி வரும் உற்பத்தி மற்றும் சேவை தொழிற்பிரிவுகளில் பல்வேறு மாநிலத்தவர் வந்து பணிபுரியும் அபரிமித நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில். பலதரப்பட்ட அடித்தட்டு மற்றும் மேற்தட்டு தொழிலாளர் மற்றும் பணியாளர்களுக்கு இந்த "ஸ்மார்ட் கார்டு"அறிமுகம் காப்பீட்டு சேவையில் ஓர் மதிப்பு கூட்டலாக அமையும் என்பது திண்ணம். தொழில் அதிபர்கள் மற்றும் முனைவோருக்கும் கூட இதனால் மனிதவள ரீதியாக தொலைநோக்கு பலன்கள் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**காப்பீட்டாளர் தகவல் சேகரிப்பு ..........................**

பல்வேறு தொழிலாளர் தரப்பினர் மத்தியில் வெகுவான வரவேற்பினை பெறவுள்ள இத்தகைய "ஸ்மார்ட் கார்டி"னை வழங்கிட ஏதுவாக, ஏறத்தாழ ஒரு கோடி காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் அடிப்படை அடையாள விவரங்களை சேகரிக்க தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் தீவிர முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இ.எஸ்.ஐ கோவை மண்டலத்தை பொறுத்த மட்டில் கிட்டத்தட்ட நான்கு இலட்சம் காப்பீட்டாளர்கள் இருக்கின்றனர், கோவை மண்டலத்தில் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற அனைத்து தொழிலதிபர்களும் தத்தம் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் காப்பீடு பெற்ற / பெறத் தகுதியுடைய தொழிலாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் குறித்த அடிப்படை விபரங்களை உரிய படிவத்தில் சமர்ப்பிக்க தக்க அறிவுரைகளுடன் கூடிய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. போர்க்கால அடிப்படையில் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளதால் தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் சுற்றறிக்கைகள் மற்றும் விளக்கக் கூட்டங்கள் வாயிலாக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வண்ணம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்புடைய தொழிலதிபர்கள் மற்றும் முனைவோர் உரிய படிவத்தில் ஒவ்வொரு தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தாருடைய அடிப்படை விபரங்களை 25-09-09 தேதிக்குள் அந்தந்த இ.எஸ்.ஐ கிளை அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். மாதிரிப்படிவம் மற்றும் விளக்கவுரைகளை இ.எஸ்.ஐ கிளை அலுவலகத்திலோ அல்லது கோவை துணை மண்டல அலுவலகத்திலோ நேரில் பெற்றுக் கொள்ளலாம். இவற்றை www.esicoimbatore.org என்ற இணையதளத்திலிருந்தும் தருவித்துக் கொள்ளலாம். அடிப்படை விபரங்களை உரிய படிவத்தில் இறுதியாக சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினர்க்கு "ஸ்மார்ட் கார்டு" வழங்குவதில் தாமதமோ இடையூறோ ஏற்பட வாய்ப்புள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## புள்ளி விபரத்திரட்டு ....................

காப்பீட்டுத் தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தாரின் புள்ளி விபரங்கள் அனைத்து தரப்பினர் ஒத்துழைப்புடன் முறையாக சேகரிக்கப்பட்ட பின்பு அவை தகவல் தொழில் நுட்ப உத்திகள் வாயிலாக "விப்ரோ" நிறுவனத்தாரால் ஒருங்கே பதிவு செய்யப்பட்டு மண்டல வாரியாக "புள்ளி விபரத்திரட்டு" உருவாக்கப்படும்.

## புகைப்பட, ரேகைப் பதிவு முகாம் ......................

கோவை மண்டலம் உட்பட பல்வேறு இ.எஸ்.ஐ மண்டலங்களில் விரைவில் தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தாரின் புகைப்படம் மற்றும் கைவிரல் ரேகைப் பதிவிற்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. புள்ளி விபரத்திரட்டு உருவானவுடன் முகாம் தேதி மற்றும் இடம் குறித்த விபரங்கள் அறிவிக்கப்படும். இம்முகாம்களில் காப்பீட்டாளாக்ள் தத்தம் தகுதி பெற்ற குடும்ப உறுப்பினர்களுடன் பெருவாரியாக கலந்துகொள்ள அறிவுறுத்தப் படுவார்கள். புகைப்படம் மற்றும் ரேகைப் பதிவிற்குப் பின்பு "ஸ்மார்ட் கார்டு" காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## இ.எஸ்.ஐ இணை இயக்குநர் வேண்டுகோள் ...................

தொடர்புடைய அனைத்து தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் முக்கியத்துவம் வாய்ந்த இ..எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" திட்டப் பணியில் தம்மை ஆர்வத்தோடு ஆக்கப்பூர்வமாக இணைத்துக் கொண்டு மேலான ஒத்துழைப்பினை நல்குமாறு இ.எஸ்.ஐ இணை இயக்குநர் ஆர். மோகன் குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஆர். மோகன் குமார்)
இணை இயக்குநர்
தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம்
கோயமுத்தூர்.

இடம் : கோயமுத்தூர்
தேதி : 14-09-2009